بســـــم الله الرحمن الرحيـــــم

In The Name Of Allah, The Most Gracious, The Most Merciful

# *SPECIAL EID-UL-FITR MESSAGE*

## ஈதுல் பித்தர் பிரத்தேக செய்தி

*28 July 2014*

## *Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)*

### உலகமனைத்துமுள்ள முஸ்லீம்களுக்கு,

தஷஹ்ஹுத்தும் தஅவ்வுசும் சூராஃபாத்திஹாவும் ஓதி ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

எனது அன்புமிக்க சகோதர சகோதரிகளுக்கும் குழந்தைகளுக்கும் மற்றும் அனைத்து இஸ்லாமத நம்பிக்கையாளர்களுக்கும் **"அஸ்ஸலாமு அலைக்கும் வா ரஹ்மத்துல்லாஹி வா பறக்கத்துஹு"**.

புனிதமான ரம்லான் மாதத்தை நிறைவுப்படுத்திக் கொண்டு முஸ்லீம்களான நாம் இன்று ஈதுல்பித்தர் கொண்டாடுகின்றோம். இது தியாகத்தினுடையவும் அர்பணத்தினுடையவும் மகத்தான மாதமாகும். மட்டுமின்றி எல்லாவகைப்பட்ட அச்சங்களில் இருந்தும் அவனிடம் மட்டும் இரட்சிப்பை தேடிக் கொள்ளவும், அவனிடம் மட்டும் எதிர்பார்த்தல் வைத்துக்கொள்ளவும் செய்கின்ற பக்தர்களாகிய அடியார்களில் அல்லாஹ் அவனது பிரத்தேகமான நட்பை வெளிப்படுத்திக் கொள்கின்ற மாதமேயாகும் இது. இனியொரு ஈதூல்பித்தருக்குக் கூட நமது வாழ்வு சாட்சியாக அமைய இவ்வருடத்தில் ஒரு முறைக்கூட அல்லாஹ் நமக்கு அருள்புரிவானாக.




இந்த புனிதமான ஈது நாளில் நோன்பு நோற்பது முஸ்லீம்களுக்கு அல்லாஹ் தடைசெய்திருக்கின்றான். அதற்கு மேலாக நாம் அனைவரும் அல்லாஹ்வின் அதிதிகளாவோம். ஆகவே படைத்தவனின் விருப்பத்திற்கு ஏற்றவார் நாம் மகிழ்ச்சியுடன் தின்றும் குடித்தும், அவனிடமுள்ள நமது கடமைகளை உள்ளபூர்வமான நிலையில் நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். அத்தோடு அவன் நமக்கு செய்துள்ள நிரந்தரமன அருள்களை நினைவில் கொண்டு அதற்கு அவனிடம் நன்றி செலுத்தவும் வேண்டும்.

மிக மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் இஸ்லாமிக உலகமனைத்தும் ஈதுல் பித்தர் கெண்டாடுகின்றன. நம்பிக்கையாளர்களின் உதவி வட்டாரத்துக்குள் வாழ்ந்து வருகின்ற ஏழைகள் உட்பட எல்லா ஒவ்வொருவர்களும் கொண்டாடுகின்ற இந்த தினம் குறிப்பாக குடும்ப பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டுகொள்வதற்கான ஒரு புண்ணிய தினம்கூடயாகும். நம்பிக்கையாளர்களில் இத்தினம் மிக மகிழ்ச்சியை ஏற்படுத்திக்கொள்வது சர்வ வல்லவனாகிய அல்லாஹ்வின் அன்பையும் நட்பையும் பெற்றுக்கொள்ளலாம் என்ற எண்ணமேயாகும்.

ஈதுல் பித்தரைக் குறித்து அல்லாஹ்வின் தூய தூதர் முஹமது முஸ்தபா (ஸல்) அவர்கள் கூறியதாக இவ்வாறு காணலாம்.

"ரம்லான் மாதத்திற்கு முடிவுகட்டிக்கொண்டு ஈதுல் பித்தரின் இரவு தோன்றிக்கொண்டால் அந்த இரவை அழைப்பது **'பரிசுகளின் இரவு'** என்றாகும். ஈது நாளின் விடியற்காலையில் பூவுலகின் அனைத்து பட்டணங்களிலும் கிராமங்களிலும் பார்வையிடுவதற்காக அல்லாஹ் அவனது மலக்குகளை நியமிக்கின்றான். அவர்கள் ஒரு தடவை இறங்கிக் கொண்டல் எல்லா வாயில்களிலும் இடைப்பாதைகளிலும் பிரவேசன வழிகளிலும் நிலையுறைத்துக் கொண்டு அல்லாஹ்வின் அனைத்து படைப்பினங்களும் கவனித்துக் கொள்ளும் தரத்தில் குறிப்பாக ஜீன் வர்க்கங்களும், மனித வர்க்கங்களும் செவியேற்கும் வகையில் அவர்கள் உரைத்த குரல் இவ்வாறு கூறிக்கொள்வார்கள்.

**"ஏய் முஹமதின் சமூகமே உங்களின் பெரிய பாவங்களுக்கு மன்னிப்பு கிடைப்பதற்கும் மகத்தான பரிசுகள் பெற்றுக்கொள்வதற்குமாக கருணைமிக்கவனும் எல்லாவல்லவனுமாகிய அல்லாஹ்வின் முன் வாருங்கள்".**

நம்பிக்கையாளர்கள் மிக முக்கியத்துவத்தோடு பிரார்த்தனைக்காக அணிசேர்ந்து நிற்கும் பொழுது அல்லாஹ் அவனது மலக்குகளிடம் இவ்வாறு கேட்பான்.

**அன்புக்குரிய எனது மலக்குகளே இந்த ஒப்பந்தகாரர்களான தொழிலாளர்களுக்கு என்ன பிரதிபலன் வழங்கிக்கொள்ள வேண்டும். அவர்கள் அவர்களுடைய வேலைகளை முற்றிலும் சரியான நிலையில் செய்து முடித்தார்களா?**

அப்போது அல்லாஹ்வின் மலக்குகள் இவ்வாறு பதிலளிப்பார்கள்.

எங்களின் எஜமானனான இறைவா! அவர்களுக்கான கூயை நீ முழுமையாக வழங்குவாயாக.

அந்நேரம் அல்லாஹ் மலக்குகளிடம் கூறிக்கொள்வான். ரமலான் மாதத்தில் அவர்கள் நோன்பு நோக்கியதினுடையவும் அந்த இரவுகளில் அவர்கள் கண்விழித்துக் கொண்டதினுடையவும் பலனாக நான் அவர்களை பாராட்டிக் கொள்வதும், நான் அவர்களை ஏற்றுக்கொள்வதும் அவர்களின் பாவங்களுக்கு நான் மன்னிப்பு அளித்துக்கொள்வதும் அத்தோடு அவர்களுக்கு மகத்தான பரிசுகள் வழங்கிகொள்வதும் கண்டு அதற்கு சாட்சிகளாகயிருக்க உங்களுக்கு நானிதோ அழைப்பு விடுக்கின்றேன். மேலும் அடியார்களை நோக்கி அல்லாஹ் இவ்வாறு கூறிக்கொள்வான்.

எனது பிரியமான அடியார்களே எனது ஆற்றல்களையும் மகத்துவத்தையும் முன்வைத்துக்கொண்டு நான் கூறுகின்றேன். நீங்கள் உங்களின் தேவைகளை இப்போது என்னிடம் கேட்டுக்கொள்ளுங்கள். அதாவது உங்களின் வாழ்க்கையுமாக தொடர்புடைய பௌதீகமான தேவைகளுக்கு நான் வழங்கி கொள்வதை தவிர்த்து உங்களின் வாழ்விற்கு தேவையாக பாதுகாத்துகொள்வதற்கான மற்றெதுவும் இந்நாளில் கேட்க கூடாது.

நான் எனது ஆற்றல்களும் சக்தியும் கொண்டு, சட்டத்தை (ஷரியத்) பின்பற்றிக் கொள்கின்றோர்களின் முன் உங்களை அவமானப்படுத்தமாட்டேன். உங்கள் (குற்றகுறவுகளை) திறந்து காட்டவும்மாட்டேன். ஆனால், நீங்கள் இப்பொழுது என்னிடமிருந்து விலகி கொள்கின்றீர்கள் என்றால், நிச்சயமாக நீங்கள் புரிந்துக்கொள்ளுங்கள். நான் உங்களுக்கு மன்னிப்பை வழங்கியிருந்ததாகவும் நான் உங்களை ஏற்றுக்கொண்டிருந்ததாகவும் உங்களின் நான் திருப்தியடைந்திருந்ததாகவும்.

(Reference Ghunyalit Taalibi Tareegal Haq Vol.3)

அதற்கும் மேலாக திருநபி (ஸல்) அவர்கள் கூறியதாக இவ்வாறு காணலாம்.

**"ஈது தொழுகை பூர்த்தி செய்து கொண்டு நம்பிக்கையாளர்கள் திரும்பி கொள்வதோடு அவர்கள் செய்திருந்த அனைத்து பாவங்களும் மன்னிக்கப்படுகின்றது".** (மிஸ்காத் ஷரீப்).

ரமலான் மாதத்தில் அல்லாஹ்வின் கட்டளைகளை முழுமையாக கடைபிடித்த முஸ்லீம்களுக்கு ஈதுல் பித்தர் ஆனந்தத்தின் நேரமாகும். ஆனால் ஈது உண்மையான ஆனந்தத்தினுடைய ஊற்றாக மாறியது எப்போதென்றால், அது இஸ்லாம் தோற்றுவிக்கப்பட்ட நாட்களிலாகும். அன்று முஸ்லீம்கள் அனைத்தும் ஒரேயொரு அமைப்பாகயிருந்தனர். ஆனால் முஹமதியா உம்மத்தினர்கள் ஏக அமைப்பு என்று துரதிர்ஷ்டத்தால் இன்று கூறிக்கொள்ள இயலாது. இஸ்லாம் பலதரப்பட்ட அமைப்புகளாக இன்று மாறிவிட்டது. மட்டுமின்றி சகோதரர்கள் சகோதரர்களுக்கு நேர் ஒன்றுக்கொன்று ஆக்கிரமித்துக் கொள்கின்ற அவலநிலையும் உருவானது.

அல்லாஹ்வின் தூதனாக இந்த எளியவன் தோன்றியிருப்பது மனுகுலத்திற்காகவும் குறிப்பாக முஸ்லீம்களுக்காகவும் ஆகும் இஸ்லாம் இப்போது முற்றிலும் அபாயமான நிலையை எட்டியிருக்கின்றது. இதற்கு முதலாவதாக பதில் கூற வேண்டியவர்கள் முஸ்லீம்களே ஆவார்கள். அவர்களின் மிக மோசமான செயல்முறைகள் மூலம் இஸ்லாம் களங்கப்பட்டது மட்டுமின்றி அதன் வெகுமதியும் அழிந்து கொண்டது.

இந்த வருடத்தில் ஈதுல் பித்தரின் வருகையோடு நாம் ஹிஜ்ரா 1435 கடந்து சென்றுள்ளோம். இஸ்லாமை ஒன்றிணைப்பதற்காக பலதரப்பட்ட திட்டங்கள் தீட்டப்பட்டிருந்த போதும் அவையாவும் வெற்றியினை காணவில்லை. நமது வரலாற்றினை

எடுத்துக்கொண்டாலும் சரி, மனித குலத்தின் வரலாற்றினை எடுத்துக் கொண்டாலும் சரி, இப்போது நாம் ஒரு முடிவின் கட்டத்தை எட்டி நிற்கின்றோம். இஸ்லாமின் பகைவர்கள் இஸ்லாமையும் முஸ்லீம்களையும் முற்றிலும் அழித்துக் கொள்வதற்காக முடிவு கட்டியிருக்கின்றார்கள். அத்தோடு முஸ்லீம்கள் ஒன்றுக்கொன்று அக்கிரமித்து கொண்டு நாசத்தை அடைவதற்கான சூழ்நிலைகளை அவர்கள் உருவாக்கிக் கொள்கின்றார்கள். அதுவழியாக இஸ்லாம் மதத்திற்கு தீவிரவாதத்தினுடையவும் அக்கிரமத்தினுடையவும் விலையில்லாய்மையுடையவும் பெயர் சூட்டி பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

அனைத்து அமைப்புகளில் இருந்தும் இஸ்லாம் இன்று மிரட்டல்களை எதிர்கொள்கின்றது. பாலஸ்தீனத்தை சார்ந்த நமது சகோதர சகோதரிகளும் குழந்தைகளும் மிக வருத்தம் நிறைந்த ஒரு நிலையிலாகும். இஸ்ரவேல்களின் கரங்களால் அவர்கள் இரத்த சாட்சிகள் ஆக்கப்படுகின்றார்கள். இவ்வகை கொலைகளுக்கு எதிராக ஈடுபட்டு அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விஷயத்தில் ஒரு சிறு விரல்கூட அசைக்க இயலாத நிலையில் முற்றிலும் பார்வையாளர்களாக மாறியிருக்கின்றது உலக நாடுகள் அனைத்தும். இஸ்லாம் எனும் உடம்பு அதன் முழுமையான வளர்ச்சியினை எட்டியபோதும் அந்த உடம்பின் உறுப்பான முஸ்லீம்கள் அறிவில்லாதவர்களும் துயரம் அனுபவிப்பவர்களுமாக மாறியிருக்கின்றார்கள். பௌதீகமான பொருள் வகைகளால் வல்லமையாளர்களாகிய இஸ்லாமின் பகைவர்களுக்குமாக ஒப்பிட்டு பார்த்தால் முஸ்லீம்கள் முற்றிலும் சக்தியிழைத்தவர்கள் ஆவார்கள். நமது சக்திகள் இழக்காமலும் நம்பிக்கையை இழக்காமலும் அனைத்தும் சர்வவல்லவனான அல்லாஹ்வின் திருசன்னிதியில் அர்ப்பித்துக் கொள்ள வேண்டும். துன்புறுத்தப்படுகின்ற அவனது அடியார்களுக்கு சமாதானம் வழங்க அவன் போதுமானவனல்லவா? நாம் ஒன்று என்ற உணர்ச்சியோடு ஒரு உடம்பாக செயல்படுங்கள். அவ்வாறு செய்வோமேயானால் பல போர்களிலும் வெற்றியினை எட்டிவிடலாம். அதாவது அல்லாஹ்வின் நட்புக்காகவும் நேர்மைக்காகவும் செய்த **'பதர்ப்போர்'** போன்றே பலதிலும் வெற்றியை காணலாம்.

இந்த ஈது தினத்தினை நாம் ஒரு பொழுதும் மறந்து விடக்கூடாது. இந்த சந்தோஷமான ரம்லானையும் ஈதுல்பித்தரையும் மகிழ்ச்சியுடையதாக்குவதற்கு இயலாத நிலையில் முற்றிலும் வருத்தப்படுகின்றவர்களின் துயரம், உதவிக்காக உள்ள அவர்களின் அழுகை அங்கு சொர்க்கத்தின் உள்வரையிலும் முழங்கப்படும் வேளை. எனது பிரியமானவர்களே நாம் எல்லாம் ஒன்றிணைந்து அல்லாஹ்வின் பால் திரும்பி அவனது உதவிக்காக மன்றாடுவோம். அல்லாஹ் நம்மிடமிருந்து ஒன்று மட்டுமே தேவைப்படுகின்றான். அதாவது அவனது உண்மையான அடியார்களாக மாறி, இஸ்லாம் ஒரு உடம்பாக பரிணமித்து அவனது அன்புக்காகவும் அருளுக்காகவும் முயற்சிக்க வேண்டும் என்பதாகும். அவ்வாறு செய்துக் கொள்ள நாம் கடமைப்பட்டவர்களல்லவா?.

**எனது முஸ்லீம் சகோதர சகோதரிமார்களே குழந்தைகளே இஸ்லாமின் இந்த அவலநிலையை நினைத்து கவலைப்படுகின்றவர்களே சில வார்த்தைகளால் நான் கேட்டுக் கொள்கின்றேன். இஸ்லாமின் வெற்றிக்காகவும் உலகின் பல்வேறு திசைகளிலுமாக மிக வேதனைகள் அனுபவித்துக் கொள்ளும் முஸ்லீம்களின் இரட்சிப்புக்காகவும் முற்றிலும் எளிமையான இந்த பிரார்த்தனையில் பங்கேற்க நான் அழைக்கின்றேன். எல்லாம் முஸ்லீம்களுக்கும் குறிப்பாக பாலஸ்தீனத்தின் முஸ்லீம்களுக்கும் அல்லாஹ் அருள்புரிவானாக. பாலஸ்தீனத்தின் முஸ்லீம்கள் அனுதினம் அச்சத்தோடும் துன்புறுத்தலோடும் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களை துன்புறுத்த செய்கின்றவர்களின் கரங்களில் இருந்து இரட்சிப்பிற்காகவும், இவ்வகை துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும், துன்புறுத்துகின்றவர்கள் தோல்வியடைந்து முஸ்லீம்கள் வெற்றியை சூடி அவர்களின் நாட்டிலும் மற்று நாடுகளிலும் இஸ்லாமின் உதயம் வெளிப்பட்டுக் காண்கின்ற ஒரு ஈதுல் பித்தர் வந்துவிடட்டும்.**

இதை கவனத்தோடு கேடுக்கொண்டதற்கு நன்றி. ஈது முபாரக் இதை போன்றே எல்லா நாள்களும் நமக்கு ஈதுல் பித்தராக மாறட்டும். ஆமீன்.

அஸ்லாமு அலைக்கும் வாரஹ்மதுல்லாஹி வா பரக்காத்துஹு.

Translated by
**Azim Ahmad**
Sadr Sahibul Faraj
Kerala/ Tamil Nadu
E-mail: sahihazisulsat@gmail.com
Cell: 09789180817

**Issued by**
**Jamaat Ul-Sahih Al Islam,**
**Dawa Department,**
**Tamil Nadu, India. (Regd.No. A/693)**
**Web: www.jamaat-ul-sahih-al-islam.com**